## கைலை மலைச் சருக்கம்

### (அறுசீர் விருத்தம்)

71. மலர்மிசை வைகும் வேதன்
வாணியை நாவிற் கொண்டோன்
அலர்புவி அண்டம் மற்றும்
அனைத்துமாஞ் சராச ரங்கள்
பலபல இயற்றிப் பின்னும்
பண்ணவர் அசுரர் நாகர்
நலமுற வதிதற் கென்றே
நாட்டினன் இடங்கள் தாமும் 1

72. பின்னரும் அவன்வி ழைந்து
பிறங்கல்கள் பலவு மாக்கி
துன்னருஞ் சிகரங் கூட்டித்
தோற்றுவித் தழகு செய்தான்
அன்னவன் படைத்த வற்றுள்
ஆதியங் கடவுள் தானு
பின்னுசெஞ் சடையன் வைகும்
கைலைபோற் பிறிதொன் றில்லை 2

73. பண்டுசெந் திருவை யீன்ற
பாற்கடல் தானு மீங்கண்
மண்டுபல் வளனு மேய்ந்து
மாமலை வடிவம் கொண்டு
வண்டுழு கொன்றை வேணி
வள்ளலார் மகிழும் வண்ணம்
கொண்டுயர் கோலமாகிக்
குலவுமால் கைலைக் குன்றம் 3

74. பாரத மடந்தை முன்னாட்
பயின்றமெய்த் தவத்தால் வந்த
சீரயர் கேதா ரம்மே
சிறந்தசீ சைலம் மேரு
நேரிலாப் பதிகள் கொண்டு
நிருமலை தன்னை யீன்ற
ஏருயர் இமயக் குன்றின்
மேலதாய் இலங்கு மஃதே 4

75. பாதலந் தனிலி ருந்து பரந்துமே விரிந்தெழுந்து
மீதலந் தன்னைத் தொட்டு மேவிடு கோடி திங்கள்
சீதள நிலவெறிக்கும் திறமென ஒளியுங் கான்றே
ஓதரும் அண்டத் துச்சி அடிவரை அணவிற்றாலோ 5

76. உற்றமா மேருவாதி உயர்தரு கிரிகளோடும்
எற்றுநீர்க் கடல்களேழும்இயைந்தசீர் வட்டவெற்பும்
குற்றமில் புறத்தவாழி தாமிவை அரணதாகப்
பெற்றுமேவிளங்கிற்றம்மாபிஞ்ஞகன்கைலைக்குன்றம்

77. கற்றவர் ய ரு மந்தக்
கைலையங் கிரியை வாழ்த்திப்
பற்றலர் புரங்கள் செற்ற
பண்ணவன் கோலங் கொல்லோ
மற்றவன் இடப்பால் மேவும்
மடக்கொடி கருணை கொல்லோ
எற்றினுக் கொக்கு மென்றே
ஏமுற வளர்ந்து நிற்கும் 7

78. விண்ணவர் முனிவ ரானோர்
விரிகதிர்ப் பரிதி பின்னும்
தண்கதிர்ச் செல்வன் சீரார்
தாரகா கணத்தோர் செவ்வாய்
எண்ணிடு புதன்வி யாழன்
இவரொடு வெள்ளி மந்தன்
நண்ணியே கைலை வெற்பை
நாடொறும் வலஞ்செய் வாரால் 8

79. தாதுகுமலர் நறாவும் தண்ணெனும் புனலு மீண்டி
ஓதுநல் அருவியாகி ஒழுகுமால் சாரல் தோறும்
தீதுதீர்கங்கையீசன்கருணை போற்றெளிந்துசெல்லும்
ஆதியெங் கடவுள் வைகும் அழகுசார் கைலைக்
குன்றில் 9

80. வான்முகில் முழக்கி னோடு
மாமறை முழக்கும் ஓங்கும்
கூன்பிறைக் கொம்பின் யானை
துந்துபி யொடுமு ழங்கும்
தேன்சுவை வீணை ஓசை
திசையெலாம் பரந்து செல்லும்
மான்மழு வேந்தும் ஐயர்
மகிழ்ந்துறை கைலைப் பாங்கர் 10

81. கருப்புர ஒளியின் கந்தம்
காரகிற் புகையின் வாசம்
விருப்புறு சாந்தின் நாற்றம்
விரிமலர் விளைக்கும் மன்றல்
குருப்பொலி விண்ணோர் தாமும்
கொட்டுமந் தார வாசம்
பொருப்பினில் நிறைந்து யாண்டும்
புகுதரும் பரந்தே யம்மா 11

82. அன்னைபூங் குழலா மென்ன
ஆங்கெழும் கருமே கங்கள்
என்னையாள் அமலை சாயல்
ஏய்ந்தொளிர் மஞ்ஞை ஆலும்
முன்னவள் அருளே போல
முதிர்கனி குளிர்ந்தி லங்கும்
கன்னிதன் வதன மென்னக்
கமலமும் மலர்ந்து தோன்றும் 12

83. மேருவே முதலடுக்கல் மேவியே சிதையும் போழ்தும்
ஏருறுமுலகனைத்தும்இல்லையாமெல்லைக் கண்ணும்
பாருறு சராச ரங்கள் பட்டொழி காலைக் கண்ணும்
நீருறுசடையோன் என்னநிற்குமால் கைலைக் குன்றம்

84. வன்னியே கொன்றைமத்தம்கூவிளை வளர்தலானும்
இன்னறுங்கங்கை பாந்தள் எருக்கலைஇயைதலானும்
பொன்னிவர்மேனிஎம்மான்புரிசடைபொருவுமென்றே
பன்னுவர் அறிஞர்மேலாம்பராபரன்கைலைக்குன்றை

85. இந்திரன் முதலா வுள்ள
எண்டிசைப் பாலர் தாமும்
மந்திர மலர்கள் தூவி
மங்கலம் இசைத்து நிற்பர்
அந்தர மகளி ரானோர்
அருநடம் புரிந்து நிற்பர்
எந்தையார் கைலைக் குன்றின்
இயல்புயார் இசைக்கற் பாலார் 15

86 பத்தொடும் எட்டே என்னப்
பகர்தரு கணத்தி னோர்கள்
முத்தரே ஆதி யாய
முனிவரே அளவி றந்தோர்
தத்துசீர்ப் பதும நாபன்
தாமரை மலரோ னாதி
எத்திறத் தாரும் போந்தே
ஏத்துவர் கைலைக் குன்றை 16

(தரவுக் கொச்சகம்)

87. பூமணக்கும் திரையினொடும்
பொங்கியெழும் பகீரதியின்
தூமணக்கும் நறுநீரின்
துறைதொறும் பரந்திலங்கும்
காமணக்கும் கண்ணுதலான்
கைலைமலை நடுவணிலே
தேமணக்கும் திறம்படைத்த
செம்பொனெடுங் கோயிலுண்டால் 17

88. சித்திரத்தூண் பவழத்தால் செய்துநவ மணிகுயிற்றி
உத்தரமே முதலான உடன்வைத்தே பொன்வேய்ந்து
பத்தியெலாந் தரளவடம் பரந்திலங்கக் கைவல்லோர்
எத்திசையும்புகழ்ந்தேத்தஇயற்றினரேஎனலாமால் 18

89 செம்பொனெடுங் கோயிலயல் திருந்துமதிக் கைவினைஞர்
பம்புதிருக் குளந்தொட்டுப் பளிங்கினுயர் நீர்கூட்டி
அம்புயமே அரக்காம்பல் ஆதியபன் மலர்வளர்த்தே
எம்பெருமாற் கியைந்ததிருத் தீர்த்தமதும்இயற்றினரால்

90 ஓங்குதிருக் கோயிலிலே
உறுமரங்கில் அனந்தரவி
தாங்குமொளி விரித்ததெனத்
தயங்குமணித் தவிசதன்மேல்
பூங்குழலி அருட்சத்தி
பொருந்தியருள் சுரந்திடவே
தேங்கமழும் விரிசடையோன்
திருநகையோ டிருந்தனனால் 20

91 நற்றவத்தின் பயனதனால்
நாதனருள் சுரந்திடலால்
மற்றவரின் அருள் நோக்கம்
வாய்ந்ததிரு நந்தியவர்
பொற்பிரம்பும் சுரிகையுந்தான்
கொண்டணைந்து பொற்கோயில்
அற்றமறிந் தேவர்க்கும்
அனுமதிதான் அருள்கின்றார் 21

92 நீங்காத தும்புருவும்நிறை தவத்து விஞ்சைபரும்
தாங்கியசீர் வீணைதனை தழீயினராய்த் தழன்மெழுகின்
ஆங்குருகி விழிகளினீர் ஆறாகிப் பெருக்கெடுப்பப்
பாங்கிருந்தே அரன்புகழைப் பாடிமகிழ்ந் தேத்துவரால்

93 கடிமலரும் நறுஞ்சாந்துங்
கண்ணுதற்குக் கொண்டணைந்து
நெடிதுபணிந் திறைஞ்சுகின்ற
நிறைதவத்தோர் மாமுனிவர்

மடிவறியா ஊக்கமொடு
மனமுருகி நீர்மல்கி
அடியமர்ந்தே சாமரத்தோ
டாலவட்டம் அசைத்தனரால் 23

94 பாற்கடலிற் பணியணையில்
பள்ளிகொளும் பரந்தாமன்
காற்றினினும் மிகுவேகக்
கலுழனிலே இவர்ந்தினிதே
ஊற்றிருந்து மதுப்பில்கி
ஒழுகுகுழல் உமைகோன்றாள்
போற்றுதற்காய் அருத்திகொடு
புகுந்தனனாற் கைலைக்கண் 24

95 மற்றவனும் உவணமிசை
நின்றிழிந்து மகிழ்ச்சியுடன்
அற்றமறிந் தருணந்தி
அவர்க்குவிடை அளித்திடலும்
பெற்றமதில் ஊர்ந்தருளும்
பிஞ்ஞகனார் பாங்கணைந்தே
பொற்றிருத்தாள் முடிசூடிப்
போற்றுகின்றான் பணிந்தெழுந்தே 25

(அறுசீர் விருத்தம்)

96 வண்டமிர் கொன்றைவேணி வள்ளலேசிவனேபோற்றி
ஒண்டொடி உமையாள் பாக ஊழிநா யகனேபோற்றி
கண்டடி தேடமுன்னாள் கனலென நின்றாய்போற்றி
மண்டுசீர்க் கைலைவாணாமாமறை முதல்வேபோற்றி

97 ஆறணி சடையாய் போற்றி ஆயிழை பாகா போற்றி
ஏறணி விடங்கா போற்றி எய்துதற் கரியாய் போற்றி
நீறணிநிமலபோற்றி நெஞ்சிடங் கொண்டாய்போற்றி
பேறருள் கைலைநாதா பிஞ்ஞகா போற்றி போற்றி 27

103. பாடும் இன்னி சைக்குநூல் பண்டு செய்து தந்தவன்
தேடு மூவு லகினுஞ் சென்று மீளுஞ் செய்கையான்
நாடு வேதம் பாடி நின்று நம்பனைப் பணிபவன்
நீடு வேதன் ஈன்றவன் நேயம் மிக்க நீர்மையன் 33

104. ஆவ லோடு யார்வரும் அடிப ணிந்து போற்றியே
தேவ இருடி என்றுமே செப்ப மன்னு சீர்த்தியான்
ஓவி லாத காலங்கள் உலப்பி லாது வாழ்பவன்
நாவ லோர்க ளேத்திடும் நார தப்பெய ருளான் 34

105. நந்தி எங்க ணாதனார் நாடி நின்று விடைதர
இந்து வாழும் மௌலியான் இமய வல்லி பங்கனை
வந்து சென்னி தாழ்த்தியே வணங்கி வீணை மீட்டியே
அந்த மில்சீர் பாடியே அடிப ணிந்து ஏத்தினான் 35

(தரவுக் கொச்சகம்)

106 தாழ்சடையில்வெள்ளெருக்கேதனியிடையிற்புலியதனே
சூழ்தருமே பாரிடங்கள் சுற்றியதோ கரும்பாம்பு
வீழ்தருவார் அடியார்கள் வினைமாசு பொடியாமே
ஏழிசைகொண்டுமைபங்காஇணையடிகள்வழுத்துவனே

107. மண்ணுபுவித் தேரேறி
மலையதனைத் தனுவாக்கிப்
பன்னகத்தால் நாண்கொண்டு
பற்றலர்கள் புரமூன்றும்
புன்னகையாற் பொடிசெய்தாய்
பொருவரியாய் ஒரு நொடியில்
அன்னைமகிழ் ஆரமிர்தே
அடித்தலங்கள் வழுத்துவனே 37

108. மண்ணகத்தோர்வானகத்தோர் மலரடிகள்பரவிடவே
எண்ணிலவாம்வடிவங்கள் எடுத்தருளும்இறையோனே
நண்ணுதிருக் கயிலையமர் நாயகனே உமைபாகா
வண்ணமுறு திருவடிகள் மனத்திருத்தி வழுத்துவனே

(வேறு அறுசீர் விருத்தம்)

109. அரன்றனை இவ்வா றெல்லாம்
அன்பொடு வாழ்த்துங் காலைப்
பரந்துயர் நார தப்பேர்ப்
பண்ணவ இருடி யார்க்குச்
சுரந்தன கண்கள் நீர்தான்
தொடர்ந்தது அருவி வெள்ளம்
சிரந்தனில் கரங்கள் சேர்த்தார்
தேறலுண் வண்டே யனனார் 39

110. அத்தநீ கேட்டி அன்னை
ஆயிழை வேண்டி நிற்ப
இத்தரை மீது முத்தி
ஈந்தருள் பதிகள் மற்றும்
நத்திடு போகம் யாவும்
நல்கிடுந் தலங்க ளெல்லாம்
சித்தமே மகிழ்ந்து முன்னாட்
செப்பினை என்பர் மேலோர் 40

111. அன்றுநீ இடப்பால் வைகி
அறங்கள் நாலெட்டும் ஆற்றும்
மன்றலங் குழலாள் கேட்ப
மகிழ்வொடும் உரைத்த வெல்லாம்
இன்றுயான் கேட்டு ணர்ந்தே
இரும்புவி எய்திச் செப்ப
நன்றுமே கூறல் வேண்டும்
நாதனே அருள்வா யென்றார் 41

[கலி விருத்தம்]

112. என்று நாதர் ஏத்தி விளம்பிட
நன்று நன்றெனா நம்ம னியம்பியே
மன்ற லங்குளன் மாதுமைக் கன்றருள்
வென்ற சீர்த்தி வியன்கதை ஓதுவார்

113. பண்டை நாளினிற் பான்மொழி யாளொடும்
வண்டு பண்செயுஞ் சோலையுள் வைகினேந்
மண்டு பல்லுயிர் வாழ்வதன் நோக்கினை
விண்ட ருள்பர னேயென வேண்டினாள் 43

114 கேட்டி அம்மையே கிட்டிய நல்லுடல்
வாட்டி மும்மல வாதைகள் நீக்கியே
ஈட்டி நல்வினை முத்தியை எய்தவே
கூட்டி னேமுயிர் காயத்துட் கோதையே 44

(என்சீர் விருத்தம்)

115. ஆகமமும் அருங்கலையும் வேதந் தானும்
அறிந்துணர்ந்தே அநுபூதி ஞானங் கூடி
மேதகுநற் புண்ணியங்கள் மிகவு மாற்றி
விழைவகற்றித் தவம்பயின்று வீடு கூடல்
ஏதமிலா ஞானியர்க்கே ஏற்ற தொன்றாம்
இவையனைத்தும் நீயறிந்த செய்தி யாகும்
ஓதவரு மேனோர்கள் சிவால யத்தே
உற்றவழி பாடியற்றின் உறுவர் நன்மை 45

116. பெருகுமன்பு சீலமொடும் அருளா சாரம்
பிறங்குமுப சாரமொடும் உறவு வாய்மை
உருகியருச் சித்தலொடும் அறிவடக்கம்
உயர்ஞான தருமமெலாம் உரிமை யாக்கித்
திருக்கோயில் உள்ளிருக்கும் படிமந் தன்னைச்
சிவனெனவே கண்டுணர்ந்து வழிபா டாற்றி
அருட்பேறு பெற்றுய்வர் அகிலத் தோர்கள்
அம்மையீதுசரதமென்றான் ஐயன் பின்னும் 46

[வேறு கலி விருத்தம்]

117. தேரும் பாதலஞ் செய்யதோர் வானகம்
ஓரும் பூதலம் ஆதி உலகினுள்
சேரும் பூசனை செய்துநல் வீடுறச்
சாரும் நானிலந் தானுஞ் சிறந்ததால் 47

118. மண்ண கத்திலும் மாண்புறு பாரதம்
விண்ணு ளோர்களும் மேவுந் தகையதால்
நண்ணு சீர்த்திகொள் நாட்டில் ஆலயம்
எண்ணி லாதன ஏற்றமுற் றோங்குமே 48

119. பூத லம்மெனும் பொற்றொடி மாதவள்
காத நெஞ்செனக் கட்டுரை செய்வரால்
மாத லந்தில்லை மன்னுமப் பொற்சபை
போத மெய்ந்நடம் நாளும் புரிகுவேம் 49

120. மங்க லந்திகழ் வெள்ளிசெய் மன்றொடும்
தங்கு ரத்தினந் தாமிரம் மற்றுமே
பொங்கு சித்திரம் பூத்துயர் மன்றினும்
பங்க மில்நடம் மேலும் பயிலுவேம் 50

121. பன்னு முத்தர பாரதந் தன்னுளே
மன்னு காசியில் மங்கையே நின்னுடன்
உன்னு வார்வினை நீறது செய்துமே
முன்னு பண்பினன் முத்தியும் நல்குவேம் 51

122. நல்ல யோத்தியும் நண்ணுசீர் மாயையும்
சொல்து வாரையும் தூய மதுரையுங்
வல்ல வந்தியும் வாய்ந்திடு காஞ்சியும்
எல்லை யில்பர முத்தியை ஈகுமே 52

(கலித்துறை)

123. தில்லை வான்பதி தெரிசனை செய்தவ ரானோர்
மல்லல் மாமதுரைப்பதி பிறந்திடு மாண்பேர்
நல்ல காசியை நண்ணியே காயமுங் கழித்தோர்
எல்ல வர்களும் வீட்டினை எய்துதல் திண்ணமே 53

124. என்று பண்ணியே இறைவிபோ டேகினம் என்னாக்
கொன்றை வார்சடை வானவன் கூறலும் இப்பால்
நின்ற நாரதர் நீடுமா விரதனாம் மறையோன்
வென்றசீர்த்திகொள் வியன்கதைவிரித்தருள் என்றார்

(மாவிரதன் கதை)

125. வந்த பல்லுயிர்க் குலங்களுக் மகிழ்வுறும் வண்ணம்
எந்தை யீசனார் எருதுகைத் தேறிடும் பெம்மான்
முந்து போயகற் பந்தனில் முற்றிய கதையை
அந்த நாரதர் கேட்டிட அன்புடன் அறைவார் 55

126. துங்க மார்புகீ தாமரை மலரெனச் சொன்னால்
அங்க தில்லுறை பொகுட்டினைப் பாரதம் எனலாம்
பொங்கு நற்புகழ்ப் பாரதந் தனிலுயர்ந்தோங்கும்
சங்கை யில்பதி உளபல சிறந்தன கேட்டி 56

127. அன்ன சீர்ப்பதி பலவுளும் அயோத்தியே மதுரை
பன்னு மாமையே அவந்தியே காசிநற் காஞ்சி
பின்ன மில்லதோர் துவரையம் பதியவை பெரிதாம்
சொன்ன யாவுளுங் காசியே துய்யதாம் அறிதி 57

128. காசி யென்னுமக் கவின்மிகு பதிதனைப் புலவோர்
ஆசி லாவவி முத்தமே யுருத்திர வாசம்
தேசு லாமகா மயானமே கௌரிமா முகமே
பேசு வாரணா வாசியாய்ப் புகல்வரால் பெரிதே 58

129. பல்கு சீர்வளம் பரவிடுங் காசியில் கங்கை
நல்கு தீர்த்தமுண் டதில்குடைந் தாடியே எவரும்
எல்லை யில்லருள் விசாலையோ டெந்நமைப் பணிய
மல்லல் சேர்குளி உனதுநீ மாமுனி அறிவாய் 59

130. ஆவின் நல்லுடல் எங்கணும் அதனகும் பால்தான்
பாவி நிற்பினும் பாரினர் மடிதனிற் கொள்வார்
மேவு மாரருள் யாங்கணும் விரிந்துள தேனும்
கோவில் தன்னிலே பெருகியேவெளிப்படுங் கொள்நீ 60

131. நன்று கேட்டனை காசியின் நலனெலாம் நவின்றோம்
என்று மேபரன் இயம்பியே இருமகிழ் வுடனாய்
நின்ற மாவிர தன்கதை நிகழ்த்திட எண்ணி
அன்று கூறுவான் தொடங்கினர் அருமுனி உவப்ப 61

(அறுசீர் விருத்தம்)

132. முந்தையோர் காலந் தன்னின்
மூதறி வுடைய நம்பி
அந்தணர் திலக னன்னான்
ஆற்றிய தவத்தி னாலே
நந்துசீர் மனையாள் தன்பால்
நவையிலா மைந்தன் தானும்
வந்தனன் புவியின் மீதே
வளரிள மதியம் என்ன 62

133. மறையவன் உவகை விஞ்சி
மரபினுக் கேற்ற யாவும்
முறைமையின் ஆற்றி வைத்து
முதியவர் உவந்து வாழ்த்த
ஆறைதரு சாத காதி
அலுவல் கள்முற் றுவித்தே
நிறையுமா விரதன் நாமம்
நேயமோ டியற்றி வைத்தான் 63

134. வளரிள மதலை யுந்தான்
மறையவர் ஏத்த நின்றான்
தளர்நடை கண்டே யீன்றோர்
தவமது தந்ததென் றாடி
உளமகிழ் வுற்றார் நாளும்
ஓம்பியே கண்ணிற் காத்தார்
கிளருமுந் நூற்ச டங்குக்
கிரியையுஞ் செய்து வைத்தார் 64

135. அறையுமவ் விரதன் தானும்
அரிய ஆசாரம் பேணி
பிறையணி பெம்மான் றன்னைப்
பெரும்புலர் காலை மூழ்கி
முறையினிற் பணிந்து போற்றி
முற்றுபேர் அறிவும்வாய்ந்து
மறையொடும் அங்கம் ஓதி
மாண்புறு மாணி யானான் 65

136. மாணியா யொழுகி நின்று
மறைதெரி குமர னுக்கு
நாணொடு மடனே அச்சம்
நயனுறு பயிர்ப்பே யாதி
பூணென வுடைய ளாய
பூவையைப் புணர்ப்ப வெண்ணி
சேணெலாஞ் சென்றே
ஆய்ந்து தேடினர் ஈன்றோர் அம்மா 66

137. பிறப்பொடு குடிமை யாண்மை
பேசிடும் ஆண்டு மற்றும்
சிறப்புறு திருவோ டன்புந்
திகழுரு நிறையுங் கொண்டு
மறப்பிலா அறிவும் வாய்ந்து
மன்னுநன் மாதைத் தேர்ந்தே
அறத்திறம் வழாத வண்ணம்
அணிமணங் கூட்டி வைத்தார் 67

138. மலரொடு மணமி யைந்த
வகையென இணைந்தா ரெங்கோ
இலகுபொன் னுடனே மேய
ஒளியெனத் திகழ்ந்தார் கொல்லோ
நலமலி மணமுங் கண்ட
நங்கையும் நம்பி தானும்
தலமிசை மேலோர் போற்றத்
தலையளி செய்து வாழ்ந்தார் 8

139. நற்குடிப் பிறந்த நங்கை
நல்விருந் தோம்பி நாளும்
பற்றொடு பாச மெல்லாம்
பதியிடம் மிகவே மன்னி
உற்றுயர் வாய்மை பேணி
உவப்புடன் அறவோர்க் காத்துப்
பெற்றது கொண்டே யில்லம்
பேணினள் நாளுந் தானே 69

140. மங்கலம் என்று சொல்வார்
மனைதனின் மாட்சி சான்றோர்
இங்கதன் பேறு தானும்
இனியநற் புதல்வ ரென்பர்
துங்கமா விரதன் ஈங்கண்
தொழுதகு மகாரை யீன்று
நங்கையோ டினிது வைகி
நல்லறம் புரிந்தா னன்றே 70

[தரவுக் கொச்சகம்]

141. இன்னவகை இவனொழுகி
யிருந்திடுநாள் வினையாகுந்
துன்னியெழ வறுமையெனுந்
தொல்லைவிடம் தொடர் தரலால்
பன்னரிய வகையுழந்தான்
பரிசனரும் விட்டகன்றார்
என்னவகை மீழ்வதெனா
ஏக்கமுற்றான் அந்தணனே 71

142. மிடியென்னுந் துயர்க்கடலுள் மிகமூழ்கி வருந்துமவன்
படிதனிலே படர்ந்திரந்து பலரிடமும் பல்லிளித்துக்
கடிமலர்சேர் கற்பகமே கலைமுகிலே எனவேத்தி
அடிபணிந்தே இரந்திடுதல் அருநரகந் தருமென்பான் 72

143. பிறந்தகுடிப் புகழ்மாய்க்கும்
பிறரிடத்தே புகலவைக்கும்
அறந்தெரிந்தோர் இரப்பதெலாம்
இகழ்ச்சியென அறைந்தனரே
உறங்கிடலாம் வளர்தீயில்
உறுமிடியுந் தாங்கரிதால்
திறந்தெரியா தலக்கின்றேன்
செயற்பால தென்னென்பான் 73

144. மாவிரதன் மனமாழ்கி
வருந்துதலும் மனைக்கிழத்தி
ஆமிதனுக் கிரங்கியெனோ
அரனருளே வழிகாட்டும்
போமினித்தான் காசிநகர்
புகுந்துகங்கைக் கரையமர்ந்து
சாமிவிசு வேசரடி தாழ்ந்து
தவம் புரியுமென்றாள் 74

145. மங்கையவள் மனமகிழ மாவிரதன் காசியுற்றான்
கங்கைபடிந் தயலிருந்து கருத்துடனே எமையேத்தி
அங்கணுயர் தவந்தானும் அயர்விலனாய்ஆற்றினனால்
இங்குளதோ உழைப்பதனால் எய்தரிய ஊதியந்தான் 75

146. மறைநூல்கள் உரைத்தவிதி
வழுவானாய் மாவிரதன்
நிறையன்பால் ஐந்தடக்கி
நெஞ்சமது மிகக்குழைந்தே
இறையேனுந் துயில்இலனாய்
இறைவியையும் எந்தையையும்
மறவானாய்த் தோத்திரங்கள்
மகிழ்வுடனே மொழிகுவனால் 76

147. அலைகொழிக்கும் அளக்கரினில்
அமரரஞ்ச எழுநஞ்சை
நிலைகெடுத்து மிடறதனில்
நிற்கவைத்த நிருமலனே
கலைகுலவு மதிச்சடையாய்
கருணைபொழி பெருமானே
மலைமகள்சேர் மழவிடையாய்
வந்தெனக்கும் அருள்புரியே 77

148. மண்ணிடந்தும் விண்ணிழிந்தும் மருவலுறுமாலயனார்
துண்ணெனவே நடுநடுங்கித்துதிக்கவெழுசுடர்மணியே
பண்ணிணொடும் இசைபாடிப் பரவுநருக்கினியோனே
புண்சுமந்தமேனியனே பொருவிடையாய்அருள்புரியே

149. பொங்கரவம் பூணாடை புலியதளே ஓடுகலம்
கங்காள மாலையணி கண்ணுதலே கௌரியுடன்
இங்குசுரர் நரராதி எனைத்துயிர்க்கும் இதம்புரிந்தே
சங்கரனென் றுயர்நாமம் தரித்தனைநீஅருள்புரியே 79

150 இன்னவிதம்மாவிரதன் இருந்தவந்தான் இயற்றுதலும்
மன்னுமவற்கருள்புரிவான்மனங்கொண்டுவிரைவுடனாய்
அன்னையவள்விசாலாட்சி ஆயிழையை விடுத்தனமால்
துன்னுபுகழ் நாரதனே சொல்லுதுமேஇன்னுங்கேள் 80

(அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்)

151. அன்னையவள் ஏகுதலும் மிகக்கொண்டான்
ஆனந்தம் ஆடிப் பாடித்
தன்னைமறந் தனனாகித் தழன்மெழுகாய்த்
தாழ்ந்தெழுந்தே உருகி நின்றான்
என்னரிய தவப்பயனே என்குடியோர்
புண்ணியமே என்று தாழ்ந்தான்
பன்னுமவன் நிலைகண்டாள் பலவுயிரும்
பயந்தளிக்கும் பாவை நல்லாள் 81

152. ஆண்டருவாள் திருவாயால் அன்புடையாய்
நின்விருப்பை அறைதி என்றாள்
''வேண்டிநின்றேன் பொருட்செல்வம் மிடிதுரப்ப
விசாலையனாய் நொந்தேன்'' என்றான்
''ஈண்டுதவம் புரிகுநருக்கு வீடொன்றே
ஈகுவம்யாம் செல்வம் வேண்டின்
மீண்டுபிற பதியடைந்து தவம்புரிதி''
எனமொழிந்து விமலை மீண்டாள் 82

153, அந்தணனும் அவளைக் அவந்திமுதல்
ஆயபல பதிபுகுந்து
முந்துதவம் இயற்றினனால் ஆங்காங்கும்
முன்னுரைத்த மொழிபுகன்றாள்

உந்தனுக்குப் பொருட்பேறு வேண்டுமெனின்
உயர்காஞ்சி புகுதி யென்றாள்
வந்தவனுங் காஞ்சியினில் தவமியற்றி
வளர்செல்வம் படைத்துயர்ந்தான் 83

154, நாரதநீ நன்கறிவாய் சாத்திரங்கள்
நவில்தருமால் நாற்பாதங்கள்
நேரிலதாம் உண்மையொடும் உபாயமென
நின்றவவை விரிந்தே ஏகும்
சீருலவும் உண்மையது முத்திதனைச்
சேர்த்துவைக்கும் செப்பினீங்கண்
பேருலவும் பின்னையது காமியமாம்
பெரும்பயனை விளைக்குந்தானே 84

155, போதமொடு வீட்டினையும் போற்றிநருக்
குவந்தருளி நிற்போமேனும்
ஏதமிலாச் செல்வவளம் ஈந்தருளும்
இரும்பதிகள் பலதாம் உண்டால்
ஆதரவோடாங்கெல்லாம் எமைவழுத்தும்
அன்பினருக் ககமுவந்தே
ஓதவரும் அறம்பொருளோடின்பநலம்
உளவெல்லாம் உதவுவேமால் 85

(கலித்துறை)

156. ஏற்று மாதவம் புரிதரு நாரத இசைப்பேம்
வீற்று யாமிருந் தருள்புரி வேறுபல் பதிகள்
சாற்று கின்றுழிப் புகழ்மலி பாரத நாட்டில்
போற்று நீர்மைய அளவில முன்னரே புகன்றேம் 86

157. மற்றுங் கேளினி வளர்புகழ் இந்திய நாட்டின்
உற்ற தென்றிசை யுயர்சிவ பூமியென் றோதப்
பெற்ற ஈழமாம் பெருநிலப் பரப்பிடை உளதாம்
கொற்ற மார்தரு சிவதளி சிற்சில செல்வேம் 87

[திருகோணமாமலை]

158. தூய ஈழமாம் நாடதன்கீழ்த்திசை யாங்கண்
மேய தென்றிருக் கயிலையென் றேவரும் விளம்பும்
நேய மார்தரு கோணமா மலைப்பதி நிலவும்
ஆய தீர்த்தமும் பாபநா சம்மென அறைவர் 88

159. ஓங்கு நற்புகழ் மறைகளும் உயர்முனி வோரும்
ஆங்கு போற்றியே வழுத்திட அருணல மீந்து
பாங்கர் அம்மையார் மாதுமை பயில்தர வதிந்தே
தாங்கு கோணே சப்பெயர் தரித்தருள் வேமால் 89

தம்பலகாமம்
(வேறு அறுசீர் விருத்தம்)

160. சாற்றுந் தம்பல காமத்தில்
தகையார் சாமி மலைப்பாங்கர்
போற்றுங் கோயிற் குடியிருப்பில்
பொருந்து மாதிக் கோயிலிலே
நோற்றே எம்மை இடங்கொண்ட
நுண்ணூல் இடையாள் உமையோடும்
வீற்றே இருந்தங் கருள்புரிவோம்
வேண்டும் வரங்கள் நல்கிடுவேம் 90

(கொக்கட்டிச்சோலை)

161. ஈழ நாட்டுக் குணபாலில்
இசைசேர் மட்டு மாநிலத்தில்
சூழும் கொக்கட் டிச்சோலை
தோகை உடனாய் அமர்ந்தேதான்
தாழும் அடியர் துயர்நீக்கித்
தாங்கு சுயம்பு லிங்கமதாய்
மூழும் அன்பின் வண்ணக்கர்
முற்றும் பூசை ஏற்றிடுவேம் 91

(காலிப்பதி)

162. வீசுந் திரைக்கை ஆழிபுடை
விளங்கும் ஈழத் தென்பாலிற்
பேசுங் கலங்கள் காட்சிதரும்
பீடார் காலிப் பதிதனிலே
தேசுமிக்க சிவாலயத்துள்
தேவியுடனாய் அமர்ந்துநிதம்
ஆசில் அருளை அள்ளியள்ளி
அடைந்தார்க் கென்றும் வழங்கிடுவேம் 92

(கொழும்பு)

வேறு அறுசீர் விருத்தம்

163. இந்திரன் பேரூர் கொல்லோ
இருநிதிக் குபேரன் ஊரோ
எந்தவூர் நேரும் என்னா
ஏங்கியே புலவோர் நிற்ப
முந்துமல் உலகின் செல்வம்
முற்றொருங் கீண்டி யீங்கண்
வந்ததோ எனவி யப்ப
வளமலி கொழும்பும் ஓங்கும் 93

164. கடலிடை அனந்த கோடி
கதிரவர் மின்னு மாபோல்
மிடலுடன் யாண்டு மோங்கி
மிளிர்தரும் மாட கூடம்
படவர விறையும் பாரம்
பொறுக்கலான் பரிந்து நோவன்
இடமினி இல்லை யென்னா
எங்கணும் மிடைவர் மாந்தர் 94

165. கலைவளர் பதியே போலும்
கவின்மிகு நகரம் போலும்
நிலைபெறு தொழிலுட் பந்தான்
நிலவுமா வணமே போலும்
அலைகடல் துறையும் அஃதே
அரசியல் அரங்கும் போலும்
மலைநிகர் அரமியங்கள் மலிதரு
கொழும்பூர் தானே 95

வேறு

166. கோலங் குலவுங் கொழும்புநகர்க்
கொச்சிக் கடையாம் பதிதனிலே
சீலம்விரதந் தனையுடையார்
செம்மல் பொன்னம் பலமுதலி
ஞாலம் முற்றுஞ் சிவம்பயில
நாட்டும் பொன்னம் பலேச்சரத்தும்
பாலின் மொழியாள் உடனாகப்
பணிவார்க் கருளே புரிகின்றேம் 96

(நஞ்சுண்டான் கரை)

167. நாடுந் திருவார் நீர்கொழும்பின்
நண்ணுங் கொச்சிக் கடையொருசார்
கூடும் நஞ்சுண்டான் கரையிற்
குலவுந் தொன்மைச் சிவதளியுள்
பாடும் புகழார் காமாட்சி
பக்கல் அமர்ந்தே உவந்தருளித்
தேடும் அடியார் மகிழ்கூரச்
செல்வம் யாவும் நல்குவமே 79

(முன்னேச்சரம்)

168. ஊரும் பணிலந் தருமுத்தும்
உவரி இப்பி ஈன்முத்தும்
சேரும் முன்னேச் சரமென்னாச்
செப்புஞ் சீரார் பதியதனில்
வாரார் அம்மை வடிவழகி
வரங்கள் நல்கிப் புறங்காப்ப
ஏரார் முன்னேச் சரநாதர்
என்னும் பெரும்பேர் கொண்டுள்ளோம் 98

(திருக்கேதீச்சரம்)

(கலித்துறை)

169 நீடு திண்புகழ் நிலவுமா தோட்டநன் நகரில்
நாடு கேதுதான் நல்லருட் குறித்தனை நிறுவி
ஓடு கின்றபா லாவியுள் மூழ்கியே பணிந்த
பீடு சேர்தரும் பதியது பிறங்குதல் அறிவாய் 99

170. மிக்க நல்லறம் வளர்பொருள் போகமே வீடும்
தக்க தாம்விதம் தந்துமே அருணலங் கொழித்துப்
பக்க லம்பிகை கௌரியும் பரவுற அமர்வாம்
தொக்க நற்பெயர் கொள்கேதீசர் நாமம் 100

(ஒட்டுசுட்டான் தான்றோன்றியீச்சரம்)

(அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்)

171. மின்னும் முகில்கள் எழுந்தோடி
மேவித் துயிலும் தகையினவாய்
துன்னும் சோலை இடைநடுவே
தோன்றும் ஒட்டு சுட்டானில்

எண்ணும் அருள்சேர் தான்தோன்றி
ஈசன் சுயம்பு லிங்கத்தே
நண்ணிப் பணிவார்க் கெஞ்ஞான்றும்
நவமார் இன்பம் நல்கிடுவேம் 101

(கீரிமலை நகுலேச்சரம்)

172. எல்லாம் உடைய ஈசன்றான்
இறைவன் என்னுங்கொள்கையினார்
நல்லார் நகுல முனியென்னும்
நாமந் தானும் படைத்துடையார்
வல்லார் தவமே புரிதந்த
வளமார் நகுலேச் சரத்தேயும்
சொல்லார் நகுலாம் பிகையுடனாய்த்
தொழுவார்வினைகள் மாற்றிடுவேம் 102

173. எற்றுந் திரைகள் வந்தேறி
எழுந்து மடியும் எக்கரினில்
உற்று நறுநீர் சுரந்தருவி
உருவாங் கீரிமலை தனிலே
பற்றும் பவமுங் கெடவடியார்
பாடி மகிழ்ந்தே நகுலேசா
சற்றே இரங்காய் எனவேண்டித்
தாழ்ந்தே துதிப்ப அருள்கின்றேம் 103

வண்ணை வைத்தீசுவரம்

174. தண்ணார் தமிழைச் சைவத்தைத்
தகவோ டோம்பிப் பேணுதலான்
மண்ணோர் பரவும் யாழ்நாட்டில்
மகிழுந் திருவாழ் மறுகுமலி
வண்ணார் பண்ணைப் பதிவள்ளல்
வைத்தி லிங்கர் எடுத்தஎளி
விண்ணோர் ஏத்தத் தையலுடன்
விரும்பி அமர்ந்தே அருள்கின்றேம் 104

(காரை திண்ணமாபுரம்)

175. இன்பாய் அங்கம் நால்வேதம்
என்றும் ஓதுஞ் செந்நாவரர்
அன்பே எம்பால் நனிபூண்டார்
அகத்தே நினைவார் ஐந்தெழுத்தை
வன்பே நீக்கி விருந்தோம்பி
வாய்மை காக்கும் அந்தணர்வாழ்
பண்பார் காரை மாநகரில்
பரவுந் திண்ண புரமுண்டால் 105

176. பாங்கர் உளதாஞ் சிவதீர்த்தம்
படிந்தே ஆடி எழுந்தன்பர்
ஓங்குஞ் சுடரே சிவபரனே உற்ற
துணை நீ எனவேண்ட
ஆங்கன் சௌந்த ராம்பிகையாம்
அன்னைமடமா துடனாகித்
தாங்குஞ் சுந்த ரேசரெனும்
தனிப்பேர் மேவி அருளுவமால் 106

வேறு அறுசீர் விருத்தம்

177. சீருயரும் நாரதரே நாமுரைத்த
செய்தியெலாஞ் செவிமடுத்தீர்
பேருயரும் பாரதத்தில் உயர்காசிப்
பதியதனில் பிறங்கு கோலம்
ஏருலவுஞ்சிவபூமி எனப்பரவும்
ஈழத்தும் இயற்ற எண்ணி
காருலவுஞ் சோலைவட்டூர்க் கொள்ளோங்கை
அகலிடத்தும் காதல்கொண்டோம் 107

178. சிவஅப்பா முதலியெனுஞ் செம்மலெமை
அருச்சிக்கும் சிறப்பு மிக்கார்
நவமாகத் தாமமைத்த நற்றளியுள்
அவர்வேண்ட நங்கையொடும்
அவமாயை அகன்றுயிர்கள் இட்டசித்தி
அடைந்தின்பம் அனைத்துந் துய்க்கத்
தவமாரும் வட்டூரில் விசுவேசக்
கோலமொடு கோயில் கொண்டேம் 108

179. வந்துதொழு தெழுமடியார் வறுமையெலாம்
அகன்றுவளர் வாய்த்து வாழ்வார்
முந்துமுடற் பிணியுடனே உயிர்ப்பிணியும்
ஆதவன்முன் பனியாய் வீயும்
நந்திடுமே நற்கிளையும் நாடியன
பெற்றனராய் நலமே துய்ப்பார்
இந்திரனே நிகராகி இப்புவியில்
நெடிதுவாழ்ந் தெம்மைச் சேர்வார் 109

180. என்றிறைவன் வாய்மலர்ந்தான் இருகண்ணும்
ஆனந்த வருவி சிந்த
நன்றுரைத்தீர் எம்மடிகேள் நானிலத்தோர்
கடைத்தேற வழியுஞ் சொன்னீர்
சென்றுரைப்பேன் உலகுயிர்கள் இன்பநலம்
துய்த்திடவே இனித்தா னென்றே
அன்றுரைத்து நாரதரும் அமலனடி
தொழுதேத்தி விடையுங் கொண்டார் 110

181. கொங்குதங்கு மலர்க்குழலி கூறுடையான்
தொல்லையெரு தேறும் ஐயன்
பொங்குகங்கை தனையடக்கிச் சடைமுடித்துப்
புரந்திட்ட புனித மூர்த்தி
மங்குல்தவழ் மணிமாட நெடுவீதி
வட்டூரில் விசுவே சன்றான்
எங்களன்பிற் கட்டுண்டே இனிதமர்ந்தான்
இறைஞ்சியினி யேத்து கேமே 111

182. தெற்றிதொறு மிருந்துகிள்ளை திருமுறைகள்
பாடிமகிழ் வட்டூர் தன்னில்
குற்றமெலாம் நீக்கியெமைக் குணமருளி
வளர்த்தெடுக்கும் விசாலை கேள்வன்
கற்றைமதி வேணிபுனை விசுவேசன்
கழலிணைகள் சிரத்தி ருத்தி
வற்றாத வளமுடைய யாழ்நாட்டுச்
சருக்கமினி வகுத்துரைப்பாம் 112

கைலை மலைச் சருக்கம் முற்றிற்று

விசாட்சி சமேத விசுவநாத சுவாமி

திருவடி துணை

ஆகத் திருவிருத்தம் 182